## சுருக்கம்

திட்டங்கள் – மாநிலத் திட்டம் – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2016–17 வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டது – தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழகங்களின் பேருந்து பணிமனைகளுக்கான பேருந்து பராமரிப்புக் கூடம், சுற்றுச் சுவர் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கும் பணிகளையும் எடுத்துச் செய்தல் – வழிகாட்டு நெறிமுறைகளில் திருத்தம் – வெளியிடுதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

### ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அதி–1)த் துறை

அரசாணை(நிலை) எண்.92 நாள்: 08.08.2016

படிக்கப்பட்டவை.

1. அரசாணை (நிலை) எண்.79, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 4.7.2016.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண்.20910/2016/NEDM-2, நாள் 13.07.2016.

----

**ஆணை:**

படிக்கப்பட்ட 1–ல் உள்ள அரசாணையில் 2016–17ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டன. இதில், இன்ன பிறவற்றுடன் ஒரு தொகுதிக்கு என ஒதுக்கப்பட்ட ரூ.2,00,00,000/–ல் வரையறுக்கப்பட்ட கூறுநிதியாக ரூ.1,10,00,000–ம், வரையறுக்கப்படாத கூறு நிதியாக ரூ.90,00, 000ம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. படிக்கப்பட்ட 2–ல் உள்ள கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், அரசாணை (நிலை) எண்.292, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 14.6.2010–ல் இன்ன பிறவற்றுடன், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட வரையறுக்கப்படாத கூறு நிதியில் இருந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களின் பணிமனைகளுக்கான பேருந்து பராமரிப்புக் கூடம், சுற்றுச்சுவர் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல் ஆகிய பணிகள் எடுத்துச் செய்ய ஆணைகள் வெளியிடப்பட்டன என தெரிவித்து, அதேபோல் 2016–17ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட வழிகாட்டு நெறிமுறைகளிலும் வரையறுக்கப்படாத கூறு நிதியில் இருந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களின் பணிமனைகளுக்கான பேருந்து பராமரிப்புக் கூடம், சுற்றுச்சுவர் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் தளம் ஆகிய பணிகள் மேற்கொள்ள ஏதுவாக பத்தி எண்.3–ல் உள்ளடங்கிய 3.1–ல் சேர்த்து உரிய திருத்தங்களை வெளியிடுமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே பத்தி 2–ல் உள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக பரிசீலனை செய்து அவற்றை ஏற்றுக்கொள்ளலாம் என முடிவு செய்து, அரசாணை (நிலை) எண்.79, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 4.7.2016–ன் இணைப்பில் பத்தி 3–ல் பின்வருவனவற்றை பத்தி 3.1 (iii) ஆக சேர்த்து திருத்தம் வெளியிடுகிறது.

திருத்தம்

3. எதிர்மறையான பட்டியல்/ தடை செய்யப்பட்ட பணிகள்

------------------------

3.1

விதிவிலக்கு:–

I.

II.

III. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்து பணிமனைகளுக்கான பேருந்து பராமரிப்புக் கூடம், சுற்றுச்சுவர் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹன்ஸ் ராஜ் வர்மா
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15 வாயிலாக).
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
செயலாளர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வாயிலாக).
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை–3.
இயக்குநர், பேரூராட்சிகள் இயக்குநரகம், சென்னை–108.
ஆணையர், கருவூலக் கணக்கு, சென்னை–15.
உறுப்பினர்/செயலர், மாநிலத் திட்டக் குழு, சென்னை–5.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை–108.

மாநில தலைமை கணக்காயர், சென்னை – 6/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (தலைமை செயலகம்), சென்னை–9.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–1.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
தேசிய தகவல் மையம், சென்னை–9.

<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கூடுதல் தலைமைச்
செயலாளர்/செயலாளர் – I, சென்னை–9.
மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, மற்றும் சிறப்புத்திட்ட செயலாக்கத் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
தலைமைச் செயலரின் தனிச் செயலர், சென்னை–9.
நிதி (வரவு–செலவு– I / வரவு–செலவு– II / ஊ.வ) துறை, சென்னை– 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.